1991 சனவரி 23]

வேலைவாய்ப்பு உருவாகும் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இவையெல்லாம் தொழில் நுணுக்க சம்பந்தமான தொழில்களாக, அதுவும் மின்னணு தொழில் நுணுக்கத் திறன் தேவைப்படுகிற தொழில்கள் என்கிறபடியால் அதற்குரிய அடிப்படைத் தகுதி உடையவர்கள்தான் அதிலே எடுத்து கொள்ளப்படுவார்கள். பொதுவாக எம்.ஏ., பி.ஏ. இந்தப் பட்டங்கள் எல்லாம் இதற்கு நேரடியாக தேவை என்று கருதப்பட மாட்டாது.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவர் அவர்களே, இதிலே மதுரையோ, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டமோ எதுவும் சேர்க்கப்படாமல் இருப்பதை கனம் அமைச்சர் அவர்கள் உணர்ந்து அங்கே அந்தத் தொழில் நுட்பக் கல்லூரிகளை அமைத்துத் தருவதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இன்று உற்பத்தித் தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள் அல்ல. இரண்டாவது இவையெல்லாம் சில குறிப்பிடத்தக்க இடத்தில் அமைந்தால் ஒன்றுக்கொன்று தொடர்பாகச் செயற்படுவதற்கான வசதிகள், வாய்ப்புகள் அமையும். தொழில் முறையில் சாதாரணமான நூற்பு ஆலை போல் நாம் விரும்புகிற இடத்தில் ஏற்படுத்தக் கூடியவை அல்ல. சர்க்கரை ஆலை ஏற்படுத்துவதற்கே கூட நாம் போதுமான அளவு கரும்பு உற்பத்தியாகின்ற வட்டாரத்தைத் தேடித்தான் ஏற்படுத்துகிறோம். இது சற்று தொழில் நுணுக்கமும் அது போன்று தொழில்கள் வேறுபல அமைவதைப் பொறுத்தும் அமைக்க வேண்டியிருக்கிறது. எலக்ட்ரானிக்ஸுக்காக ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டும் என்று கருதப்பட்டு திருவள்ளூர் வட்டாரத்திலே ஒரு தொழிற்பேட்டை அமைக்கிற ஒரு முயற்சியும் இருக்கிறது.

பெண்களுக்கு விளையாட்டுப் பள்ளி.

*11060—திரு. கு. பிச்சாண்டி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 10-வது வகுப்பு வரையுள்ள பெண்களுக்கு கோவையில் விளையாட்டுப் பள்ளி உள்ளது போல பிளஸ் 2 வரை படித்தவர்களுக்குப் பயிற்சி அளிக்க விடுதியுடன் கூடி விளையாட்டுப்பள்ளி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?